# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
# எக்கோஸ் இந்தியா

மே 2008 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 1 இதழ் 3


அன்பார்ந்த சகோதர சகோதரிகளுக்கு,

எஸ்.ஆர்.சி.எம். செய்திமடல் இனி "எக்கோஸ் இந்தியா" என்று அழைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். உலகெங்கிலும் பிரசுரிக்கப்படும் அனைத்து எஸ்.ஆர்.சி.எம். செய்திமடல்களுக்கும் ஒரே பெயர் இருக்கவேண்டும் என்பதற்காகவே இந்த பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இக்கோடை விடுமுறையில் நாடெங்கிலும் உள்ள ஆசிரமங்களில் பல, குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகளால் நிரம்பியிருந்தன. பாபூஜியின் பிறந்தநாள் ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள் ஒவ்வொரு மண்டலத்திலும் குறிப்பிட்ட சில ஆசிரமங்களில் கொண்டாடப்பட்டன. ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு மாஸ்டர் மேற்கொண்ட 50 நாட்கள் சுற்றுப்பயணம் மக்களை சகஜ மார்க்கக் குடையின் கீழ் ஒன்றிணைப்பதில் அவருக்குள்ள ஈடுபாட்டை மீண்டும் நிரூபித்துள்ளது. மாஸ்டரின் அந்தப் பயண நிகழ்ச்சிகளில் சிலவற்றையும், லக்னோவில் நடைபெறஇருக்கும் நமது மாஸ்டரது பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கான தயாரிப்புகள் பற்றியும் இந்த இதழில் வெளியிட முயன்றுள்ளோம்.

செப்டம்பர் இதழுக்கான செய்திக்கட்டுரைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 10.08.2008 ஆகும். கட்டுரைகளை 100 முதல் 150 வார்த்தைகளுக்குள் நிகழ்ச்சியில் எடுக்கப்பட்ட நிழற்படங்களுடன் அவரவர் மண்டலப் பொறுப்பாளர் வழியாக அனுப்பவும்.

அன்புடன்,
ஆசிரியர் குழு.







## மாஸ்டரின் பயணங்கள், ஏப்ரல்-மே 2008

### டெல்லி

ஏப்ரல் 19-ம் தேதி மாஸ்டர் லக்னோவிலிருந்து டெல்லி வந்தார். குட்காம் மண்டல ஆசிரமத்தில், புதுப்பிக்கும் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு மாஸ்டரின் வருகைக்குள் நிறைவுற்றிருந்தன.

இப்போது அந்த ஆசிரமம் புதுப்பித்து விரிவாக்கப்பட்ட தியானக்கூடம், மாஸ்டர் குடில், உணவுக் கூடம் மற்றும் பொருள் வைப்பு அறை இணைந்த ஒரு சமையல் கட்டு, புதிய குளியலறைத் தொகுப்பு, கான்கிரீட் சாலைகள் மற்றும் அடர்ந்த பசுமையான செடிகொடி மர வரிசைகள் ஆகியவற்றுடன் புத்தம்புதிதாக காட்சியளிக்கிறது. ஏப்ரல் 20-ம் தேதி, மாஸ்டர், தன் குடிலைத் திறந்து வைத்தார்.

குடிலுக்கு முன்பிருந்த பசுமையான தோட்டம் அவரை மிகவும் கவர்ந்தது. திறப்பு விழாவைக் குறிக்கும் வகையில் மாஸ்டர், அங்கு இரண்டு மரக்கன்றுகளை நட்டார்.

சத்சங்கம் முடிந்தபின் அப்யாசிகளுடன் உரையாடிக் கொண்டு, சிசுக்களுக்கு பெயர் வைத்து, குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கி, தன்னார்வத் தொண்டர்களுக்கு பரிசுகளை வழங்கி மாஸ்டர் தனது நேரத்தை செலவிட்டார். சகோதரி ரஞ்சனாவின் பஜனைப் பாடல்கள் அன்றைய நிகழ்ச்சிகளுக்கு சிகரமாக விளங்கியது.

### துபாய்

மாஸ்டர், வெளிநாட்டு சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளும்போது தான் செல்லவேண்டிய இடங்களுக்கு சுருக்கமான விமானப் பயணங்களை விரும்புவதால், துபாய் ஒரு துவக்கமாக அமைந்து விட்டிருக்கிறது.

ஏப்ரல் 22-ம் தேதி சகோதரர் அஜய் பட்டர் மற்றும் சுமார் 25 இந்திய அப்யாசிகளுடன் மாஸ்டர் டெல்லியிலிருந்து விமானம் மூலம் துபாயை அடைந்தார். அங்கு அவர் ஒரு அப்யாசியின் அடுக்கு மாடி வீடு ஒன்றில் தங்கி அதற்குக் கீழ்த்தளத்திலுள்ள சமுதாயக் கூடத்தில் சத்சங்கங்களை நடத்தினார். அபுதாபி மையத்திற்கு ஒரு சிறு பயணம் மேற்கொள்ளவும் அவர் நேரம் ஒதுக்கினார். ஏப்ரல் 25-ம் தேதியன்று துபாயிலுள்ள ஈரானியன் கிளப்பில் மாஸ்டர் நடத்திய சத்சங்கத்தில் கலந்து கொள்வதற்காக ஐக்கிய அரபு நாடுகள் முழுவதிலுமிருந்து 350 அப்யாசிகள் ஒன்று கூடினர். ஒரு மணி நேரம் நீடித்த அந்த சத்சங்கத்தின் தன்மையை வைத்து அங்கு செயல்பட்டு வரும் பிரசெப்டர்களின் நற்பணியை மாஸ்டர் பாராட்டினார். ஏப்ரல் 26-ம் தேதி அங்கிருந்து மாஸ்கோவிற்குப் புறப்பட்டார்.









## சோவியத் அப்யாசிகளுக்கு மாஸ்டரின் அருள்வீச்சு

சுமார் பத்தாண்டுகளுக்குப் பிறகு ரஷ்யாவிற்கும், பெலாரஸிற்கும் சென்று, மாஸ்டர் சோவியத் மண்டல நாடுகளிலுள்ள அப்யாசிகளின் இதயங்களை மகிழ்வித்தார். மாஸ்கோவில் க்ளைஸ்மா பென்சனேட்டில் நடைபெற்ற பாபூஜி மகராஜ் அவர்களின் பிறந்த ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களில் அவர் கலந்து கொண்டார். அங்கு கலந்துகொண்ட 450 அப்யாசிகளின் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்ததில் மாஸ்டர் மகிழ்ச்சியாக இருந்தார். பயணக் களைப்பாலும், அதிகப்படியான வேலை பளுவாலும் உடல்நலப் பிரச்சினைகள் இருந்த போதிலும், மாஸ்டர் உற்சாகமாக அப்யாசிகளுடன் தொடர்ந்து உரையாடிக் கொண்டு இருந்தார். அவரது உரையாடல் பெரும்பாலும் சரளமான ரஷ்யமொழியில் இருந்தது. உரையாடலின் போது அவர் சகஜ மார்க்கத்தின் கூறுகளையும், பயிற்சிமுறையையும் அப்யாசிகளுக்கு விளக்கினார். மாஸ்கோவில் ஆசிரமம் / தியானக்கூடம் அமைப்பதற்கு மாஸ்டர் ஒரு வடிவம் தந்ததோடு அதற்கான நிதியையும் திரட்டினார்.

மாஸ்கோவில் ஒரு வாரம் செலவிட்ட பின்னர் மின்ஸ்க், பெலாரஸிலுள்ள 250 அப்யாசிகளின் அன்புப்பிணைப்பில் அடுத்த 5 நாட்களை செலவிட்டார். சகோ. இகோர் ஒனிசெங்கோ அவர்களால் கட்டப்படவிருக்கும் யோக மையத்திற்கு அவர் அடிக்கல் நாட்டினார். அம்மையம் மிஷனின் சத்சங்கங்களுக்கும், மின்ஸ்க் மையத்தின் பிற பணிகளுக்கும் பயன்படும். உடல்நலப் பிரச்சினைகளால் மாஸ்கோவில் நடைபெற்றவண்ணமிகு அன்பு நிறைந்த கலை நிகழ்ச்சிகளைத் தவறவிட்டிருந்தாலும், மின்ஸ்க் ஆசிரம சதுக்கத்தின் ரம்மியமான சூரிய ஒளியில் நடைபெற்ற அப்யாசிகளின் ஆடல்-பாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மாஸ்டர் அக்குறையை நிவர்த்தி செய்தார். மாஸ்டர் தன் பயணத்தை ரஷ்யமொழி பேசும் அன்பர்களுடன் கொண்டாடுவதற்காக இயற்கையே வழிவிட்டதுபோல் அங்கு எப்போதும் சூரிய ஒளி வீசிக் கொண்டிருந்த சூழல் நிலவியது.

## ஐரோப்பிய நாடுகளில் மாஸ்டர்



பால்டிக் நாடுகளில் ஒன்றான லாட்வியா முன்பு ரஷ்யக்குடியரசு நாடுகளில் ஒன்றாக இருந்து தற்போது ஐரோப்பிய சமுதாயத்தின் ஒரு அங்கமாக ஆகியுள்ளது. புகழ்பெற்ற கடற்புற தங்குமிடமும், அந்நாட்டுத் தலைநகருமான ரிகாவில் இருக்கும் நமது மையத்தில் 40 அப்யாசிகள் உள்ளனர். இங்கு நமக்கு சொந்தமாக ஒரு எளிய தியானக்கூடம் உள்ளது. இங்கு இரண்டு நாட்கள் தங்குவதற்காக, மாஸ்டர் மே 6ம் தேதி பெலாரஸிலுள்ள மின்ஸ்கிலிருந்து விமானம் மூலம் சென்றார். கடல்முகப்பில் அமைந்துள்ள ஒரு ஹோட்டலில் தங்கி தன் வசிப்பறையில் இரண்டு சத்சங்கங்களை மாஸ்டர் நடத்தினார்.




முதுகிலும் கால்களிலும் கடுமையான வலி இருந்த போதிலும் மாஸ்டர் தனது ஐரோப்பிய பயணத்தை விடாது மேற்கொள்வதில் உறுதியாக இருந்தார். தன் ஒருவரது பிரச்சினையால், மற்ற அனைவரும் சிரமத்திற்கு ஆளாகக் கூடாது என்பதே மாஸ்டரது எண்ணமாக இருந்தது.

தன் உடல்நலத்தைக் கருத்தில் கொண்டு, டென்மார்க்கில் உள்ள வ்ராட்ஸ் ஸாண்ட் ஆசிரமத்தில் மூன்று வாரம் தங்க தீர்மானித்து மாஸ்டர் தன் பயணத்திட்டத்தை மாற்றியமைத்தார். அங்கு தங்கியிருந்த சிலநாட்களிலேயே அவரது உடல்நலம் தேறியது. அவருடன் இருப்பதற்காக ஐரோப்பிய அப்யாசிகள் குழுக்களாக வர ஆரம்பித்தனர். சுமார் 1200 அப்யாசிகள் அங்கு வந்து மாஸ்டருடன் இருந்தனர். வ்ராட்ஸ் ஸாண்ட் அவரது இன்னொரு வீடுபோல் ஆயிற்று. அவர் அடிக்கடி அருகிலிருந்த இடங்களுக்கு உலாவச் சென்றதுடன், சில சமயம் ஆசிரம சமையல்கட்டு, உணவுக் கூடம் அல்லது தியானக்கூடம் வரை நடப்பார். பெரும்பாலான நேரம் அவர் அங்கிருந்த எல்லா அப்யாசிகளுடனும் வெளியில் அமர்ந்திருந்தார். தன் குடிலின் பின்புறத்தில் சிட்டிங் கொடுக்கும்போது அப்யாசிகள் ஆங்காங்கே மேடுபள்ளமான தரைகளில் அமர்ந்தனர்.

வ்ராட்ஸ் ஸாண்ட் ஆசிரமத்தை மாஸ்டர் ஒரு சர்வதேச ஆசிரமமாக அறிவித்தார்.







இதையொட்டி ஒரு சிறு உரை பதிவு செய்த மாஸ்டர், வ்ராட்ஸ் ஸாண்ட் ஆசிரமத்திற்கு வரும்படி குறிப்பாக உலகெங்கிலுமுள்ள இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார். அங்கிருந்து 70 அப்யாசிகளுடன் 600 கி.மீ. பயணம் செய்து நான்கு நாடுகளைக் கடந்து மாஸ்டர் மே 26-ம் தேதி பாரீஸ் சென்றடைந்தார். அங்கு ஒரு ஹோட்டலில் தங்கி பாரீஸ் ஆசிரமத்தில் மே 28 அன்று 200 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார்.



அடுத்த ஐந்து நாட்கள் காலெட்டில் மலைகளுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு அப்யாசியின் வீட்டில் தங்கி, மாஸ்டர் சற்று ஓய்வெடுத்து, உடல் தேறினார். இருந்தும் அவர் மான்ட்பெல்லியர் ஆசிரமத்திற்குச் சென்று அங்கிருந்த 150 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நிகழ்த்தினார்.

ஜூன் 5-ம் தேதி, ஆல்ப்ஸ் மலைத்தொடரைக் கடந்து 13 கி.மீ நீண்ட மலைக்குகைப் பாதையைத் தாண்டி இத்தாலியில் உள்ள மிலன் நகரை வந்தடைந்தார். பயணத்தின் நடுவே, *ஆஸ்டா* ஆசிரம மையத்தில் மதியம் இத்தாலிய உணவை சுவைத்தார். அடுத்தநாள், மிலனில் புதிதாக வாங்கப்பட்ட தியானக்கூடத்தைத் திறந்து வைத்து அன்றும் மறுநாளும் சத்சங்கங்கள் நடத்தினார்.

2008 ஜூன் 8-ம் தேதி சோவியத் கூட்டமைப்பு நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் வரலாற்றில் பதிவுசெய்யக்கூடிய தன் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு விமானம் மூலம் துபாய்க்குத் திரும்பிய மாஸ்டர், ஜூன் 15-ம் தேதி இந்தியாவிற்குத் திரும்பினார்.

**எஸ்.எம்.எஸ்.எஃப் புத்துணர்வு மையம், மலம்புழா**

கேரளாவில் உள்ள மலம்புழா புத்துணர்வு மையம் 14-04-2008 முதல் செயல்படத் துவங்கியது. இது மிஷனின் முதல் புத்துணர்வு மையமாகும். புணேயில் உள்ள இரண்டாவது புத்துணர்வு மையமும் செயல்படத் தொடங்கியுள்ளது.

மலம்புழா மையம் 48 அப்யாசிகள் தங்கும் வகையில் உள்ளது. விடுதிக் கட்டடம் ஆண்களுக்கும் பெண்களுக்குமாக இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இயன்றவரை முதிய அப்யாசிகள் தரைத்தளத்தில் தங்க வைக்கப்படுகின்றனர். கட்டில்கள், மெத்தைகள் மற்றும் படுக்கை விரிப்புகள் ஆகியவையும் அங்கு தங்குபவர்களுக்கு வழங்கப்படுகின்றன. மையத்தில் தங்குவது முற்றிலும் இலவசமாகும். இங்கு வரும் அப்யாசிகள் குறைந்தது மூன்று நாட்களும் அதிக பட்சம் 30 நாட்களும் தங்கலாம். கணவனும் மனைவியும் ஒரே நேரத்தில் இங்கு தங்க இயலாது. குழந்தைகள் இங்கு அனுமதிப்படுவதில்லை.

இம்மையம் செம்பனா பஸ் நிலையத்திற்கு அருகில் காவா என்ற இடத்தில் அமைந்துள்ளது. இது மலம்புழா பஸ் நிலையத்திலிருந்து 6 கி.மீ. தூரத்தில் உள்ளது. பாலக்காடு ரயில் நிலையத்திலிருந்து 15 கி.மீ தூரத்திலும், பாலக்காடு நகரத்திலிருந்து 20 கி. மீ தூரத்திலும் கோயம்புத்தூர் விமான நிலையத்திலிருந்து 55 கி.மீ தூரத்திலும் அமைந்துள்ளது. பாலக்காட்டிலிருந்தும், மலம்புழாவிலிருந்தும் அடிக்கடி பஸ் போக்குவரத்து உள்ளது. மையத்தை அடைய மலம்புழாவிலிருந்து வாடகைக் கார்களும் ஜீப்களும் ஆட்டோக்களும் கிடைக்கும். மலம்புழாவிலிருந்து காவாவிற்கு பஸ் வசதி உள்ளது என்றபோதும் அவ்வசதி அடிக்கடி இல்லை. பஸ்ஸில் வருபவர்கள் செம்பனா நிறுத்தத்தில் இறங்கி மையத்திற்கு நடந்தே செல்லலாம். அங்கு வருபவர்களின் வசதிக்காக செம்பனா பஸ் நிறுத்தத்தில் எஸ்.எம்.எஸ்.எஃப் என்று எழுதப்பட்ட பலகை ஒன்று இருக்கிறது. ஒரு அடையாளமாக ஒரு மின் டிரான்ஸ்ஃபார்மர் செம்பனா நிறுத்தத்தில் இருப்பதையும் காணலாம்.

புத்துணர்வு மையத்திற்கு வருவதற்கான தேதிகளை நிர்ணயித்துக் கொள்ள

http://sahajmarg.org/welcome/retreat/index.html என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

**'எங்கள் மாஸ்டர்' நூல் மாஸ்கோவில் வெளியிடப்பட்டது.**




'எங்கள் மாஸ்டர்' என்ற தலைப்பிலான நூல் ஒன்று 2008 ஏப்ரல் 30-ம் தேதி மாஸ்கோவில் மதிப்பிற்குரிய மாஸ்டரால் வெளியிடப்பட்டது. இது, பல வருடங்களாக மாஸ்டருடன் கூடவே இருந்த அப்யாசிகளின் கட்டுரைத் தொகுப்பு நூல் ஆகும். இதில் தம் நினைவில் நிற்கும் அனுபவங்களையும் உணர்வுகளையும் அவர்கள் விவரித்துள்ளார்கள்.

## லக்னோ



ஏப்ரல் 16-ம் தேதி மாஸ்டர் லக்னோவிற்குச் சென்று ஒரு கொண்டாட்டமான சூழலில் அங்கு புதிதாகக் கட்டப்பட்டுள்ள மாஸ்டர் குடிலைத் திறந்து வைத்தார். இரண்டு ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள அக்குடிலைச் சுற்றிலும் ஏராளமான பசிய மரம், செடி கொடிகள் உள்ளன. பல்வேறு நகரங்களில் இருந்து 4000 அப்யாசிகள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

## ஜூலை கொண்டாட்டத்திற்கான ஆயத்த பணிகள்

உத்திர பிரதேசத்தில் உள்ள லக்னோவில் ஜூலை 23 முதல் 25 வரை நடைபெறவிருக்கும் மதிப்பிற்குரிய மாஸ்டரின் 81-வது பிறந்தநாள் விழா பற்றி வாசகர்களுக்கு மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறோம். விழா ஏற்பாடுகள் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டுள்ளன. நாடெங்கிலுமிருந்து 25000 க்கும் அதிகமான பங்கேற்பாளர்கள் இதில் கலந்து கொள்ள தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை 35000 ஆக உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்திற்கு அருகில் சீதாப்பூர் ஹர்தோய் மாற்று வழிச்சாலையில் அமைந்துள்ள லக்னோ ஆசிரமம் 100 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது. லக்னோ ரயில் நிலையத்திலிருந்து 20 கி.மீ தூரத்திலும் லக்னோ விமான நிலையத்திலிருந்து 25 கி.மீ. தொலைவிலும் உள்ளது. அந்நிலையங்களிலிருந்து ஆசிரமத்திற்கு எல்லா அப்யாசிகளையும் இட்டுச் செல்லவும், திரும்ப விடவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜூலை மாதம் வெப்பமாகவும், ஈரப்பதமாகவும் இருக்கும் என்பதால் அப்யாசிகள் குடை மழைக்கோட்டு மற்றும் கை விசிறிகளைக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 1,50,000 சதுர அடி பரப்புள்ள தியானக் கூடமும் 1,00,000 சதுர அடி பரப்புள்ள சமையற்கட்டு மற்றும் உணவுக்கூடமும் நீர் புகாத படுதாக்களால் மூடப்பட்டுள்ளன. ஆம்புலன்ஸ் வசதியுடன் கூடிய மருத்துவ மையம், வங்கி மற்றும் இணையதள மையங்கள், விரிவான உணவகம், சிறுவர் திடல், புத்தக நிலையங்கள் மற்றும் பெயர் பதிவிடங்கள் ஆகிய முக்கிய வசதிகளும் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எல்லா அப்யாசி சகோதர, சகோதரிகளுக்கும் பொதுவான தங்குமிடம் இலவசமாக வழங்கப்படுகிறது. படுக்கைகள் விற்பனைக்குக் கிடைக்கும் என்ற போதும், வாடகை அடிப்படையிலும் முதலில் வருவோருக்கு முன்னுரிமை என்றஅடிப்படையில் குறைந்த எண்ணிக்கையில் கிடைக்கும். மேலும் படுக்கைகள், விரிப்புகள், தலையணைகள், கொசுவலைகளுடன் கூடிய வசதியுள்ள தங்குமிடங்களும் அப்யாசிகளுக்குக் கிடைக்கும்.


விழாவின் போது திருமணம் செய்துகொள்ள இருக்கும் அப்யாசி குடும்பத்தினரின் வசதிக்காகவும், திருமண ஆண்டு நிறைவைக் கொண்டாடும் அப்யாசி குடும்பத்தினரின் வசதிக்காவும், காலை உணவிற்கும், இரவு உணவிற்கும் தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விழாவிற்கு முன்பும் பின்பும் பணியாற்றபல தன்னார்வத் தொண்டர்கள் தேவைப்படுவார்கள். விழாவிற்கு 3000 குழந்தைகளுக்கு மேல் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால், அவர்களை கவனித்துக் கொள்ள பயிற்சிபெற்றஅப்யாசிகள் தேவைப்படுகிறார்கள். அதற்கு விருப்பமுள்ளவர்களின் பெயர்களை

mehrotrashyamji@yahoo.co.in என்றஇ-மெயில் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு எல்லா மையங்களையும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்விழாவை வெற்றிகரமான ஒன்றாக ஆக்கிட தங்கள் ஆதரவையும் உதவியையும் நாடுகிறோம். இந்தப் புனிதமான விழாவை நினைவு கூறத்தக்க ஒன்றாக ஆக்குவோமாக.

# பாபூஜியின் 109-வது ஆண்டு நிறைவு



## மைசூர்

மைசூர் மண்டல ஆசிரமத்தில், ஏப்ரல் 30-ம் தேதியன்று மைசூர், ஹாசன், ஹஸூர், சிக்மகளூர், கொள்ளேகால், பெங்களூர், பெரியபட்னா, குஷால்நகர், டி. நர்சிபூர் மற்றும் சாம்ராஜ்நகர் மையங்களிலிருந்து வந்த 450 அப்யாசிகள் பாபூஜியின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவதற்காகக் கூடியதால் அது மிகுந்த உயிர்ப்புடன் காணப்பட்டது.



இரண்டு சத்சங்கங்களில் கலந்து கொண்டதுடன் அன்றைய தினத்தை அப்யாசிகள் மிகவும் பயனுள்ளதாக செலவிட்டனர். அவர்கள் பாபூஜியின் வாழ்க்கை மற்றும் போதனைகள் பற்றிய வீடியோ காட்சியைக் கண்டு களித்தனர். சகோதரி கல்பனா அவர்களால் தொகுத்தளிக்கப்பட்ட பாபூஜி மகராஜின் படக்காட்சி, விழாவிற்கு மேலும் மெருகூட்டியது. ஹன்சூர் அப்யாசிகள் பாபூஜி பற்றிய வினா-விடை போட்டியொன்றை நடத்த, சிறுவர்கள் மேடையில் பாடல்களையும் சிறு நாடகங்களையும் பிரார்த்தனை மற்றும் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினர். மாஸ்டர்களைப் பற்றியும், பயிற்சிமுறைபற்றியும் குழந்தைகள் மிகவும் சிறப்பாகப் பேசியது மிகவும் இதயம் கவர்வதாக அமைந்து விட்டது.

மொத்த சூழலும் மாஸ்டரின் பிரசன்னத்தால் நிரம்பியிருந்தது என்பதைக் கூறத் தேவையில்லை என்பதோடு, அதில் கலந்த கொண்ட அனைவரும் ஆன்மீக ரீதியாக மிகுந்த லாபத்தையும் அடைந்தனர்.

## உத்தராகண்ட்

இமயமலைத் தொடரைப் பின்புலமாகக் கொண்ட இந்த மலைப் பிரதேசம், பாபூஜியின் பிறந்தநாள் விழாவின்போது, பாபூஜியின் பெயரை எங்கும் எதிரொலிக்கும்படி செய்தது. மிஷனின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஆசிரமமான இமயமலையில் உள்ள சத்கோலில், அருகிலிருந்த மையங்களில் இருந்து 140 அப்யாசிகள் கூடி பக்தியுடனும், உற்சாகத்துடனும் பாபூஜியின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடினார்கள். மாநிலத்தின் தலைநகரமான டேராடூனில், சத்சங்கங்களும், பாடல்களும், வீடியோக் காட்சிகளும் நடைபெற்றதோடு, பாபூஜி மகராஜ் அவர்களின் வாழ்க்கையும் வாக்கும் பற்றிய சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன.

ரூர்கி, பிதோராகட், ஹல்த்வானி மற்றும் காசிபூர் ஆகிய பிற மையங்களும் பாபூஜியின் பிறந்தநாளை உற்சாகத்துடன் கொண்டாடின.

## கோல்ஹாபூர்

கோல்ஹாபூர், மீரஜ், சதாரா மற்றும் புணே ஆகிய மையங்களின் அப்யாசிகள் ஒன்றுகூடி பாபூஜியின் பிறந்தநாளைக் கொண்டாடினர். பெல்காம், குல்பர்கா, கோந்தியா ஆகிய மையங்களிலிருந்தும் இவ்விழாவில் அப்யாசிகள் பரவலாகக் கலந்து கொண்டனர். இரு சத்சங்கங்களும், பாபூஜியின் வாழ்க்கையும், வாக்கும் பற்றிய அப்யாசிகளின் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

சகோதரி நூரி அவர்களும், சகோ. கோபாலும் தமது உலகியல் வாழ்க்கையைப் பற்றியும், லாலாஜி மகராஜின் அருட்பார்வையால் தான் பெற்ற ஆன்மீக முன்னேற்றம் பற்றியும் உரையாற்றினர். பாபூஜிக்கும் அவரது தலைமைச் சீடரான நமது மாஸ்டருக்கும் உள்ள உறவு பற்றி சகோதரி லதா படேல் பேசினார்.

சகோ. ஏ.என். குல்கர்னி, சகோதரி அருந்ததி காளே மற்றும் சகோ. சுதாகர் ஜோஷி ஆகியோர் பாபூஜி மகராஜுடனான தத்தமது நெகிழ வைக்கும் அனுபவங்களை விவரித்தனர். சகோதரி ஸ்நேஹா ரஜுரிகரின் பக்திப் பாடல்களுடன் அந்த நாள் நிறைவுற்றது. எல்லா மையங்களிலிருந்தும் வந்த அப்யாசிகள் தன்னார்வலர்களாக களைப்பின்றி உழைத்து விழா வெற்றிகரமான ஒன்றாக அமைவதை உறுதி செய்தனர்.

## வடோதரா

வடோதரா மையம் குஜராத் மண்டலத்திற்கான பாபூஜி மகராஜ் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டங்களை, சுமார் 1300 அப்யாசிகளுடன் நிகழ்த்தியது. சிறு பூந்துவல்களைப் பொழிந்து, இயற்கை தனது அன்புப் பெருக்கை நல்கியது. அதி ஆழத்திற்கு நம்மை இட்டுச் சென்ற பிரம்மாண்டமான சத்சங்கத்திற்குப் பிறகு அந்த தியானத்தில் மென்மைப்பட்டிருந்த இதயங்கள் 'மாஸ்டரின் தேர்வு' என்ற தலைப்பிடப்பட்ட டி வி டி யிலிருந்து வெளிவந்த உள்ளத்தைத் தொடும் இசையால் உருகின. மதிப்பிற்குரிய மாஸ்டர் சமீபத்தில் கோவாவில் நிகழ்த்திய உரை, விழாநாள் செய்தியாக ஆங்கிலத்திலும் குஜராத்தியிலும் வாசிக்கப்பட்டது.

சகோ. சுரேஷ் தியானம் செய்யாத வேளைகளிலும் மாஸ்டருடன் நிலையான உள்தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான அவசியத்தை வலியுறுத்தினார். ஆன்மீகத்தில் சிறப்பான முன்னேற்றத்தை அடைய எல்லோரும் ஆன்மீகத்திற்கு முன்னுரிமை அளிக்கும்படியும், ஆன்மீகத்தின் முக்கிய அங்கமாக அதற்குத் தேவையான உற்சாகத்தை உருவாக்கிக் கொள்ளும்படியும் அவர் வலியுறுத்தினார். சகோ. ராஜேந்திர ராதோட் அவர்கள் 'முன்னேற்றத்திற்கு சீரிய வழி தன்னார்வத் தொண்டே' என்றதலைப்பில் வழங்கிய உரை, அப்யாசிகள் ஜூலை 2008 மாஸ்டரின் பிறந்தநாள் விழாவிற்கான தன்னார்வத் தொண்டிற்கு தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமளவிற்கு ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது.

மதிய உணவிற்குப் பிறகு, ஆனந்த், அங்கலேஷ்வர், பரூச், பாவ்நகர் மற்றும் வடோதரா மையங்களால் வழங்கப்பட்ட கலை நிகழ்ச்சிகளை பார்வையிடுவதற்காக அப்யாசிகள் தியானக்கூடத்தில் குழுமினர். பாடல்கள், நடனங்கள் மற்றும் சிறு நாடகங்கள் ஆகியவை அப்யாசிகளாலும் அவர்களின் குழந்தைகளாலும் நிகழ்த்தப்பட்டன. ஒரு சிறிய தேநீர் இடைவேளைக்குப் பிறகு 'சகஜ மார்க்க வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதில் பெண்களின் பங்கு', 'சாதனாவில் ஒழுங்குமுறை', 'சகஜ மார்க்கத்தில் இளைஞர்களின் பங்கு' ஆகிய தலைப்புகளில் முறையே, சுமன் தவே, சகோ. பரத் டன்னா மற்றும் சகோ. புனித் லால்பாய் ஆகியோர் உரையாற்றினார்கள். அதன் பின்னர் பாபூஜி மகராஜ் அவர்களின் ஐரோப்பிய பயணத்தைப் பற்றிய வீடியோ காட்சி திரையிடப்பட்டது.



SRCM

# எக்கோஸ் இந்தியா

மே 2008 | தனிப்பட்ட உபயோகத்திற்காக | மலர் - 1 இதழ் 4

## அறிமுகக் கூட்டங்கள்

### மங்களூர்



03-04-08 அன்று மங்களுரில் சேசதனா உயர்நிலைப்பள்ளியில், முக்கியமாக மாணவர்களின் பெற்றோர்களுக்/காகக ஒரு அறிமுகக் கூட்டம் நிகழ்த்தப்பட்டது. இப்பள்ளியின் அறக்காப்பாளராகிய டாக்டர். சபீதா அவர்கள், மிக்க ஆர்வத்துடன் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்ச்சிக்கு, இம்மையப் பொறுப்பாளர் கீதா ஆசாரியா அவர்கள் தேவையான உதவிகளைச் செய்தார்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷனின் பிரசெப்டரும், பக்கத்து ஊர் உப்பினங்காடி கல்லூரி ஆசிரியருமான சகோ. வசந்தகுமாரி சபையோரை வரவேற்றுப் பேசினார். அதைத் தொடர்ந்து ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சியில், குழந்தைகள் மற்றும் மனிதர்களைப் புரிந்து கொள்ளுதல், அவர்களது நிறைகுறைகளுடன் அவர்களை ஏற்றுக் கொள்ளுதல், அன்பின் அடிப்படையில் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவை ஆகிய விஷயங்கள் பேசப்பட்டன. மேலும் வாழ்க்கையில் சரியான மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள ஆன்மீகம் எவ்வாறு உதவுகிறது என்பது பற்றியும் விவரமாக விளக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்த பெற்றோர்கள் தங்களது ஆதரவை உற்சாகத்துடன் வெளிப்படுத்தினர்.

### கார்கலா



கார்கலாவைச் சேர்ந்த அனேக்கரே என்ற ஊரில் சகோதரர் ராமானந்த் பட் அவர்களது இல்லத்தில் 18.05.08 அன்று நடத்தப்பட்ட அறிமுகக் கூட்டத்தில் 20க்கும் மேலானோர் கலந்து கொண்டனர். மங்களூரைச் சேர்ந்த சகோதரி புஷ்பா சகஜ மார்க்கப் பயிற்சியைப் பற்றியும், சமநிலை ஜீவிதத்தில் ஆர்வமுள்ளோருக்கு அது வழங்குவது என்ன என்பது பற்றியும் அறிமுக உரையாற்றினர். வேத இலக்கியம், பகவத்கீதை, புத்தமதம் ஆகியவற்றிலிருந்து மிகச் சிறந்த உதாரணங்களை எடுத்துரைத்த அவர், பக்திப்பாடல்கள் சிலவற்றுடன் உரையை முடித்தார்.

### உடுப்பி

*ரோபோஸாப்ட்* அலுவலகத்தின் பொதுக்கூட்ட அறையில் 'சிறந்த வாழ்க்கைக்கு தியானம்' என்ற விஷயம் அறிமுகப்படுத்தப்பட்ட போது, நூற்றுக்கும் மேற்பட்ட *ரோபோஸாப்ட்* அலுவலர்கள் அதில் கலந்து கொண்டனர். சகோதரர் ராமானந்த் பட் சகஜ மார்க்க பயிற்சிமுறையை அறிமுகப்படுத்திய பின், ஒரு சிறப்பான வாழ்க்கை வாழ, சகஜ மார்க்கம் அளிப்பது யாது என்பதைப் பற்றி விவரமாகப் பேச சகோதரர். மோகன் அவர்களை மேடைக்கு அழைத்தார். சகோ. மோகன், தியானம், தியானத்தின் வரலாறு, அதன் தேவை, மனிதனின் பரிணாம வளர்ச்சி மற்றும் திருத்தியமைக்கப்பட்ட ராஜ யோகமாகிய சகஜ மார்க்கம் ஆகியவற்றைப் பற்றி பேசினார்.

இந்தப் பயிற்சி முறையை மேற்கொள்ள 44 பேர் ஆர்வத்துடன் முன் வந்தனர். ஜூன் 9 ம் தேதி முதல் ஆரம்ப சிட்டிங்குகள் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## முன்னேற்றப் பாதையில்
## தாவண்கெரே மையம், கர்நாடக மாநிலம்.

24.01.08 அன்று, மதிப்பிற்குரிய மாஸ்டரது அருளாசி மற்றும் அனுமதியுடன், தாவண்கெரே மற்றும் ஹரிஹர் இவ்விரு இடங்களிலிருந்து எட்டு கி.மீ. தொலைவிலுள்ள தொட்டபட்டி என்ற கிராமத்தில் இரண்டு ஏக்கர் விவசாய நிலத்தை இந்த மையம் வாங்கியுள்ளது.

இங்கு இவ்விரண்டு மையங்களுக்கும் பொதுவாக ஒரு ஆசிரமம் அமைய உள்ளது. மேலும், இரண்டரை ஏக்கர் நிலம் அப்யாசிகள் வீடு கட்டிக் கொள்ள வாங்கப்பட்டுள்ளது.

இந்நிலத்தை ஒட்டிய மலைப்பகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ள இந்தப் புகைப்படத்தில், சிவப்பு கோடிட்ட பகுதி-1, மிஷனுக்கான நிலத்தையும், பகுதி-2, அப்யாசிகளுக்கான காலனியையும் காட்டுகிறது.




## ஸோலாபூர், மகாராஷ்டிரா
## ஒரு ஆசிரமத்திற்கான முன்னோடி



பாபூஜி மகராஜ், ஜூலை 6, 2003 அன்று அளித்திருக்கும் அருட்செய்தியில், 'வரவிருக்கும் பத்தாண்டுகளில் ஆசிரமங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதற்கு அநுகூலமான அறிகுறிகளை நாங்கள் காண்கிறோம். எனவே அதிகரிக்கும் தேவைகளைக் கையாளும் விதத்தில் கட்டிட அமைப்புகளைப் பற்றி சிந்திப்பது விவேகம்' என்று கூறியுள்ளார்.

இதை செயல்படுத்தும் வகையில் மே 29ம் தேதி, ஸோலாபூர் அப்யாசிகள் ஒன்றரை ஏக்கர் நிலத்தை வாங்கி, நாளடைவில் அங்கு ஒரு ஆசிரமம் அமைக்க, அதை மிஷனுக்கு நன்கொடையாக அளித்துள்ளனர். இந்த நிலம் ஸோலாபூரிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ள அக்கல்கோட் ரோடில் அமைந்துள்ளது.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷனின் துணைச் செயலாளர் சகோ. ஏ.பி. துரையும், மையப்பொறுப்பாளர் சகோ. எஸ் வைத்யாவும், அந்நிலத்தைப் பதிவு செய்வதற்கான சட்ட நடவடிக்கைகளிலும், அப்யாசிகளுக்கான அன்றைய நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் ஸோலாபூர், வர்ஷி, உஸ்மானாபாத், லாதூர் மற்றும் ஔசா ஆகிய இடங்களிலிருந்து சுமார் 120 பேர் பங்கேற்றனர். பங்கேற்றவர்களில் ஸோலாபூரின் முதல் பிரசெப்டரான சகோதரி. அநசூயா ராமசந்திரன் குறிப்பிடத்தக்கவர்.

# SUMMER CAMPS

## பெங்களூரு

28-05-08 அன்று பனசங்கரி ஆசிரமத்தில் நடந்த கோடை முகாமில் பெற்றோர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுடன், 3 லிருந்து 18 வயதிற்குட்பட்ட சுமார் 40 குழந்தைகள் பங்கேற்றனர். அறிமுக உரைகளைத் தொடர்ந்து, யோகப்பயிற்சி இடம் பெற்றது. 20 பேர் அடங்கிய இரு குழுக்களாக, குழந்தைகளை வயதிற்கேற்பப் பிரித்தனர். இம்முகாமில் பலவிதமான விளையாட்டுக்கள் - குழந்தைகளை சிந்திக்க வைக்கும் 9க்கு9 சதுரங்கள் கொண்ட குழுத் தொடர்பு விளையாட்டு, பிளாஸ்டர் ஆஃப் பாரிசில், குழந்தையின் கை அச்சு தயாரித்து, அதற்கு வண்ணம் தீட்டல், மூலப்பொருட்களை மட்டுமே கொண்டு புதிதாக ஏதாவது உருவாக்குதல், பாட்டுக்கள், கிரிக்கெட், நாயும் எலும்பும் என்றவிளையாட்டு மற்றும் குழந்தைகளது கற்பனையில் தோன்றிய வேறுபல விளையாட்டுகள் ஆகியவை இடம் பெற்றன. நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக் கல்வி குழு, இவற்றைஒருங்கிணைத்து நன்னெறிகளை குழந்தைகளுக்கு உணர்த்தினர். இத்துடன் மதியம், சக்தியூட்டும் பானங்கள் மற்றும் ஐஸ்கிரீம் அளித்து, பிற்பகலில் பழக்கலவையும் கொடுத்து, குழந்தைகளுக்கு அன்றைய நாளை முற்றிலும் பயனுள்ளதாக, சந்தோஷம் நிறைந்ததாகச் செய்தனர்.





## அகமதாபாத்

அப்யாசிகளின் குழந்தைகளுக்கான கோடை முகாம், அகமதாபாத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் ஒரு நிகழ்ச்சியாகும். இந்த வருடம் மே 26 முதல் 29தேதி வரை நடைபெற்ற நான்காவது முகாமில் 34 குழந்தைகள் கலந்து கொள்டனர். இதன் நோக்கம், குழந்தைகளுக்குப் புதிய நண்பர்களை அறிமுகப்படுத்துவதும், புதுமையாகப் படைக்கும் அவர்களது ஆற்றலை வெளிக்கொணரும் வகையில் ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதும் ஆகும்.

கற்பனைக் கதைகள் எழுதுதல், புதையல் கண்டுபிடித்தல், கைவினைப் பொருட்கள் மற்றும் மண் பாண்டங்கள் செய்தல், பொது அறிவு சம்பந்தமான வினா விடை ஆகியவை இந்நிகழ்ச்சியில் இடம் பெற்றன. ஸ்ரீகிருஷ்ணரின் வாழ்க்கையை சித்தரிக்கும் வண்ணப் படங்களைக் கொண்ட இஸ்கான் கோயிலுக்கும், பாம்புகளின் வாழ்க்கை மற்றும் அதன் பழக்கவழக்கங்களைத் தெரிந்துகொள்ளக் கூடிய சுந்தரவன இயற்கை பூங்காவிற்கும் குழந்தைகள் அழைத்துச் செல்லப்பட்டனர். கடைசி நாளன்று குழந்தைகள் பாத்திரங்களைத் துலக்கவும் முயற்சி செய்தனர். உணவுப் பொருட்கள் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாத்தல் பற்றியும் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் புதுமையாக உருவாக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்தல், இவ்விரண்டும் இந்தக் குதூகலமான கோடை முகாமின் பயனாக அமைந்தது.





## திருவனந்தபுரம்

20.4.08 அன்று திருவனந்தபுரம் மையம், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களை அழைத்து ஒரு நாள் நிகழ்ச்சி ஒன்றைநடத்தியது. மையத்தின் தன்னார்வத்தொண்டர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று நேரில் அழைத்ததை ஏற்று, 52 குழந்தைகள் (பன்னிரண்டு குழந்தைகள் மட்டுமே அப்யாசி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்) நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். பல்வேறு விளையாட்டுகளுடன், கதை சொல்லுதல், ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல் ஆகிய எல்லாவற்றிலும் குழந்தைகள் உற்சாகத்துடன் பங்கேற்றனர். அப்யாசிகளின் குழந்தைகள், பணம் சேர்த்து வைப்பதன் பயனின்மையை ஒரு நாடகமாக நடித்துக் காட்டினர்.

அனைவருக்கும் நல்ல சுவையான உணவு அளிக்கப்பட்டது. குழந்தைகள் தங்கள் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருக்கையில், பெற்றோர் ஆன்மீகம் மற்றும் சகஜ மார்க்கம் இவற்றைப்பற்றிய ஒரு விளக்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்தனர். நிகழ்ச்சி முடிவில் பலர் பயிற்சியில் சேர்வதற்கான தங்கள் தீவிர விருப்பத்தை வெளிப்படுத்தினர்.





## நஞ்சங்கூடு



இது மைசூருக்கு அருகிலுள்ள ஒரு சிறிய ஊர், இந்த மையத்தின் தன்னார்வத் தொண்டர்கள், பள்ளி மாணவர்களுக்காக நடத்திவரும் ஒரு மாத காலக் கோடை முகாம், மூன்றாவது வருடமாகிய இந்த வருடம் ஏப்ரல் மாதம் 13ம் தேதி காலை 9 மணிக்குத் துவங்கியது. ஒவ்வொரு நாளும் காலை 9 மணி முதல் 12 மணி வரை நீலகண்டேஸ்வரா கல்விக் கழகப் பள்ளியில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மிஷன் பிரார்த்தனையுடன் காலை நிகழ்ச்சி ஆரம்பித்தது. பிறகு வண்ணம் தீட்டுதல், கை வேலைகள், பாட்டுப் பாடுதல், இசை மற்றும் பொது அறிவுத் தேர்வு போன்ற பற்பல செயல்களில் குழந்தைகள் ஈடுபடுத்தப் பட்டனர். பல்வேறு பள்ளி மாணவர்களும், பக்கத்து கிராமங்களைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து சுமார் 150 பேர் பங்கு கொண்டனர். குழந்தைகளின் கைவேலைப்பாடுகள் பெற்றோர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

விழா முடிவு அன்று கண்காட்சியைத் திறந்து வைக்க சகோ. பிரபாகர் அவர்கள் பங்களூருலிருந்து வந்திருந்தார். மைசூரைச் சேர்ந்த சகோ. ஸ்ரீநிவாஸ், பள்ளியின் தலைமை ஆசிரியை சகோதரி. ரத்னா பட்டாசார்ஜி இருவரும் நிகழ்ச்சியின் முக்கிய விருந்தினர்கள். நிறுவனத்தின் தலைவராகிய கே. பி. சோமசேகர் தனது உரையில், நவீன தொழில் நுட்பத்தின் தாக்கத்தால், இன்றைய சமுதாயம் இழந்து விட்டிருக்கும் நற்பண்புகளை, குழந்தைகள் மனதில் மீண்டும் பதிய வைக்க இதுவே சரியான தருணமாகும் என்று கூறினார்.

## இளம் பருவத்தினருக்கு ஒரு இடை நேரம்

### அகமதாபாத்

பொதுவாக 13 முதல் 19 வயதுக்குட்பட்ட அனைவருமே வாழ்க்கையின் இடர்மிக்க ஒரு திருப்ப கட்டத்தில் இருக்கிறார்கள். குழப்பமுறச் செய்யும் வாழ்க்கை சவால்களை அவர்கள் எதிர் கொள்ள இயலாதவர்களாகவும் உள்ளனர். அவர்களுக்கு சரியான திசை காட்டும் முயற்சியாக, அகமதாபாத் உள்ளூர் ஆசிரமத்தில் மே 24, 25 தேதிகளில் நடத்தப்பட்ட பயிற்சி முகாமில் இவ்வயதினர் 19 பேர் பங்கேற்றனர். இம்முகாமின் நோக்கம் ஒன்று சேர்ந்து கற்றுக் கொள்ளுதலாகும். பங்கேற்றவர்களே, தாங்கள் செய்ய வேண்டிய வேலைகளை திட்டமிட்டுக் கொண்டனர், பொருட்களை இடமாற்றம் செய்தல், நிதி விவகாரம், பொருளை மதிப்பிடுதல் மற்றும் அறிக்கை கொடுத்தல் போன்ற விஷயங்களைத் தங்களுக்குள் பிரித்துக் கொண்டனர்.

கோபம், விரக்தி, எதிர்மறைஉணர்ச்சிகள் போன்ற நடைமுறைவாழ்க்கைப் பிரச்சினைகளை, மனிதன் சமாளிக்க வேண்டிய தேவையை சிறு நாடகங்கள் மூலமாக விளக்கிக் காட்டினர். இவற்றில் 10000 ரூபாயில் மாதாந்திர வரவுசெலவு திட்டத்தைத் தயாரிக்கச் செய்தது மிகவும் சுவாரசியமாக இருந்தது.

இதன் மூலம் அவர்களால் பணத்தின் மதிப்பு, பெற்றோர்கள் சந்திக்கும் பணத்தட்டுப்பாடு ஆகியவற்றைப் புரிந்துகொள்ளவும், விருப்பங்களிலிருந்து, தேவைகளைப் பாகுபடுத்தவும் கற்றுக்கொள்ள முடிந்தது.

மிஷன் புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள் படித்ததைத் தொடர்ந்து, நல்லொழுக்கம், ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு மற்றும் உண்மையைக் கடைபிடித்தல் போன்றவிஷயங்களை வரைபடங்களைக் கொண்டு அவர்கள் தெளிவுபடுத்தினர். வாழ்க்கையில் முதலிடம் அளிக்கப்படவேண்டிய விஷயங்கள் குழு விளையாட்டின் மூலம் வலியுறுத்தப்பட்டன.

டாக்டர் ஜிதேந்திரா ஜேட்வா நினைவாற்றலை வளர்த்துக் கொள்தல் குறித்துப் பேசினார். சகோ. கார் தன்னார்வத் தொண்டு பற்றியும், அதை செயல்படுத்துதல் பற்றியும் பங்கேற்றவர்களுடன் கலந்துரையாடினார். இதைத் தொடர்ந்து இளைஞர்கள் வேறு பல வேலைகளிலும் ஈடுபட்டனர். சகோதரர், சுரேஷ் ராஜகோபாலன், நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிப்பதன் பயன் மற்றும் ஒருவரது தன்மைமாற்றத்திற்கு நமது மிஷன் பிரார்த்தனை எவ்வாறு உதவுகிறது என்பதைப் பற்றி பேசினார்.




### சகஜ முகாம், ஹைதராபாத்

மே 9 லிருந்து 11 ம் தேதி வரை, தும்குண்டாவிலுள்ள மண்டல ஆசிரமத்தில், 9-17 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கென சகஜ முகாம் ஒன்று நடத்தப்பட்டது. அடுத்த இரு நாட்களும் குழந்தைகள் விளையாட்டுக்கள், நன்னெறி அடிப்படையிலான சிந்தனையைத் தூண்டும் விவாதங்கள் மற்றும் நூலகத்தில் புத்தகங்கள் படிப்பது என பல நடவடிக்கைகளில் உற்சாகத்துடன் ஈடுபட்டிருந்தனர். கோடை வெயில் காரணமாக மதிய வேளையில், வெளியில் செல்லாமல், செஸ், கேரம், புதிர் விடுவித்தல், ஒரிகாமி மற்றும் வேத கணிதம் போன்றவற்றிலும், மாலையில், திறந்த வெளி விளையாட்டுகளிலும் அவர்கள் மும்முரமாக இருந்தனர். சற்று பெரிய குழந்தைகள் தங்களுக்குப் பிடித்த விளையாட்டுகளையும், சிறிய குழந்தைகள் வேடிக்கை விளையாட்டுகளையும் ஆடி மகிழ்ந்தனர். சனிக்கிழமை மாலையும், ஞாயிறு மதியமும் குழந்தைகள் திரைப்படத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். குழந்தைகள் தங்கள் கருத்துக்களை வெளிப்படையாகவும், சுதந்திரமாகவும் வெளிப்படுத்த ஊக்குவிக்கப்பட்டனர்.

## இந்தூர்




18-05-08 அன்று, இம்மையத்தில் நமது மிஷன் இலக்கியத்தில் பொதிந்துள்ள அறிவுக் களஞ்சியத்தையும், விவேகத்தையும் சிறப்பித்துக் காட்டும் நோக்கத்துடன் ஒரு இளைஞர் முகாம் நடத்தப்பட்டது. இதில் பங்கேற்க விருப்பம் கொண்ட 25 இளைஞர்கள் மூன்று வாரம் முன்பே இதற்கான ஏற்பாடுகளை ஆரம்பித்தனர். பங்கேற்றவர்கள் அன்பு, வைராக்கியம், ஞானம் மற்றும் பக்தி என நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவிற்கும் புத்தகம் ஒன்று அளிக்கப்பட்டு, அதைப் படித்து விளக்கமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இக் குழுக்களுக்கு சகோதரர்கள் சுரேந்திர திரிபாதி, பூபேந்திர படோட், சசின் காண்டேகர் மற்றும் அமித் படோட் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக இருந்தனர். ஒவ்வொரு குழுவின் கருத்தும் அக்குழுவிலுள்ள ஒரு மூத்த அப்யாசி மூலம் எடுத்துரைக்கப்பட்டது. நிகழ்ச்சியை சகோ. ரமாகாந்த் அகர்வாலும், சகோ. ராஜேஷ் ராவேர்கரும் இணைந்து நடத்தினர்.

ஒரே புத்தகத்தில் எவ்வளவு செய்திகள் அடங்கியுள்ளன, எவ்வளவு கோணங்களில் அவற்றைப் பார்க்க முடியும், எத்தனை கருத்துக்கள் மற்றும் எண்ணங்களை அதனால் வெளிப்படுத்த முடியும் என்பதைப் பார்க்க மிகவுமே பிரமிப்பாக இருந்தது. அவரது அருளினால், ஒருநாள், முன்கணிப்புகளிலிருந்து நாம் விடுபட்டு, அவரது தெய்வீக எழுத்துக்களின் கருத்துக்களை, அவர் விரும்பும் விதத்தில் புரிந்து கொள்ளுமளவிற்கு முன்னேறுவோம் என்றஓர் உறுதியான உணர்வு மனதில் எழுந்தது.

## ஜெய்ப்பூர் மையக் குழந்தைகளின் நிகழ்ச்சி


மே 11 ந் தேதி, 3லிருந்து 17 வயதிற்குட்பட்ட சுமார் 40 குழந்தைகளும், இளைஞர்களும், தங்களது திறமைகளை இரண்டு மணி நேரம் வெளிப்படுத்தினர். அவர்கள், நன்னெறி அடிப்படையிலான கதைகள், பாடல்கள் மற்றும் கவிதைகள் மூலம் மாஸ்டரின் மீதான தங்கள் அன்பை வெளிக்கொணர்ந்து குழுமியிருந்த அப்யாசிகளை மகிழ்வித்தனர். மேலும், 'மதம் பிரிக்கிறது, ஆன்மீகம் இணைக்கிறது,' 'கடவுள் எங்கும் இருக்கிறார்' என்றசெய்திகளைத் தாங்கிய இரு நாடகங்களை நிகழ்த்தினர். பல வாரங்களாகவே, ஒவ்வொரு ஞாயிறும், குழந்தைகள் மையத்தில் இந்நிகழ்ச்சிக்கான தயாரிப்பு நடந்து வந்தது. நிகழ்ச்சியைப் பார்த்து உற்சாகமடைந்த சில இளைஞர்கள், தாங்களும் குழந்தைகளுடன் இணைந்து பாடினர். நிகழ்ச்சி முடிவுற்றபோது அனைவரும் மாஸ்டரின் பிரசன்னத்தை நன்கு உணர முடிந்தது. மொத்தத்தில், மேடையில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி குழந்தைகளும், மாஸ்டரது அன்பு மற்றும் அரவணைப்பில் குழந்தைகள் வளர்வதைக் கண்டு அப்யாசிகளும், மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.





SRCM எக்கோஸ் இந்தியா

மே 2008 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 1 இதழ் 4



# ஆன்மீக ஒளி மையம்

## மற்றுமொரு இமாலய நுழைவாயில் – பிதோராகட்

“நான், ஆசிரமத்தை ஒளி மையம் என்று குறிப்பிட்டிருக்கிறேன். இறைவன் நேரம் கனிந்ததாகக் கருதும்போது ஒளியுலகத்திற்கான கதவுகளைத் திறக்க அனுமதிப்பார் என்பது பழைய மரபு. இக்கதவுகளை நிர்மாணிப்பதற்காகத் தோன்றும் மகான்தான் உண்மையில் நுழைவாயிலாவார். அவர் போதிக்கிறார். அருட்செய்திகளை வழங்குகிறார். அழைப்பு விடுக்கிறார். மக்கள் ஒன்றாகக் கூடி அங்கிருந்து மேலே உயர்வதற்கான இடமாக ஆசிரமத்தை நாம் உருவாக்குகிறோம். உண்மையில், சரியான விதத்தில் அது உபயோகப்படுத்தப்படுமானால் அதுவே ஒளியுலகத்திற்கான நுழைவாயிலாக அமைகிறது” என 19 டிசம்பர் 2004 அன்று பிதோராகட் ஆசிரமத் திறப்பு விழாவில் மாஸ்டர் கூறினார்.



இது சத்கோல் ஆசிரமத்திற்கு 150 கி.மீ வடகிழக்கில், 5400 அடி உயரத்தில் பிதோராகட் என்ற மாவட்டத்தில் அமைந்துள்ளது. மாஸ்டராலேயே வடிவமைக்கப்பட்ட இந்த ஆசிரமம், கிழக்கே நேபாலும் வடக்கே திபெத்துமாக இமயமலைக் குன்றுகளுக்கு இடையே சிப்பிக்குள் முத்து போல் திகழ்கிறது. இங்கு, 500 பேர் அமரக் கூடிய ஒரு தியானக் கூடத்துடன், மாஸ்டரது குடில், சமையல் அறைமற்றும் இன்னுமொரு அறை யும் உள்ளது.




அனைத்து கட்டிடப் பொருட்களையும் கிட்டத்தட்ட 150 கி.மீ உயரம் எடுத்து வந்து இந்த ஆசிரமத்தைக் கட்டியிருப்பதை ஒரு வீரகாவியமாகவே கூறலாம். ஏப்ரல் 2004ல் ஆரம்பிக்கப்பட்ட இது, மாஸ்டரது அருளினால் ஒன்பதே மாதங்களுக்குள் வெகுவிரைவில் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. தங்கும் வசதி இன்னும் இல்லாததால், முன் அனுமதியின்றி அந்த ஆசிரமத்திற்குச் செல்ல மாஸ்டர் யாரையும் அனுமதிப்பதில்லை.





To subscribe to this Newsletter please visit http://www.srcm.org/centers/as/in/newsletter/index.jsp
For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2008 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved.
“Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.
This message may be edited for content and is intended exclusively for the members of SRCM.